1981 ஜனவரி 30]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அருள்கூர்ந்து தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : இவ்வாறு அதிகப்படியான பணத்தை குடிநீருக்காகச் செலவழிக்கிறபோது மாண்புமிகு உ. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டது போல் செலவழிக்கப்பட்ட பணத்திற்குள்ள தகுதியான வசதிகள் கூடக் கிடைக்காமல் இருக்கிறது. மாவட்ட அளவில் நடைபெறும்படியான கருத்தரங்குகளை தாலுகா மட்டத்தில், தொகுதி மட்டத்தில் கருத்தரங்குகளை நடத்தி கருத்தறிந்து பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டு பம்ப் செட்டுகள் வேலை செய்யாமல் இருப்பதைப் போக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதில் மாண்புமிகு உறுப்பினர்களின் உதவி மிகவும் தேவைப்படுகிறது. எங்கெங்கு அப்படிக் கோளாறுகள் இருக்கின்றன, பழுதுபட்டிருக்கின்றன என்ற தகவலை என்னிடத்தில் கொடுக்கலாம். அல்லது வாரியத் தலைவரிடத்தில் கொடுத்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

Anicut schemes in North Arcot District

*Q. No. 114—Thiru G. VISWANATHAN: Will the Hon. the Minister for Irrigation be pleased to state:

(a) whether there is any proposal under consideration of the Government to construct a dam at Melarasampattu in Northr Arcot District; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) ஆம். இந்த திட்டம் ஆய்விலுள்ளது.

* வினா எண் 115 திரு. இல. பலராமன்:
திரு. ஏ. சி. சண்முகம்:

மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் தாலூக்கா செண்பகத்தோப்பு என்னும் இடத்தில் அணை கட்ட ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

128—362-4

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) மற்றும் (ஆ): பாலாறு மற்றும் செய்யாறு வடிநிலங்களில் கிடைக்கக்கூடிய நீரின் அளவு, ஆயக்கட்டு விவரங்கள் முதலியவற்றை விரிவான ஆய்வு செய்வதற்காக, இத்திட்டத்தை மூன்று ஆண்டுகள் தள்ளி வைக்க 1978-ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டது. ஆய்வுகள் நடந்துவருகின்றன. அவை முடிந்ததும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலிலே ஆய்வு செய்யப்படுகிறது என்று கூறினார்கள். நிதிநிலை அறிக்கையில் இந்தத் திட்டத்தை மேற்கொள்வதாக கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதற்கு முன்னாலே ஒரு ஆய்வு செய்யப்பட்டதே அந்த ஆய்வுக்கும் பின்னால் ஏற்படக்கூடிய ஆய்வுக்கும் என்ன வித்தியாசம்? இதனால் எவ்வளவு ஏக்கர் பயிராகும்? புது ஆய்விலே என்ன மதிப்பீடு இடப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: ஏற்கனவே அரசு அறிவித்ததற்குப் பிறகு செய்யாற்றினுடைய உப படுகையில் கமண்டல ஆற்றுக்குக் குறுக்கே இந்த அணையைக் கட்ட வேண்டுமென்று முதலிலே கருத்து தெரிவித்து இருந்தோம். ஆனால் அந்தப் படுகையிலே போதுமான அளவுக்கு நீர் இல்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதைப் பகுதியிலே உள்ள பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்கள் சார்பிலே அப்படிப்பட்ட கருத்து தெரிவிக்கப்பட்டது. அதை திரும்பவும் ஆய்வு செய்யவேண்டுமென்றால் ஒரு மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அதை நடத்த வேண்டும். அப்படி நடத்தினால்தான் சராசரி 70 சதவீதம் தண்ணீரின் அளவு நமக்கு கிடைக்குமா என்பது நமக்குத் தெரியவரும். நாம் 1978 ஆம் ஆண்டு அந்த முடிவை மேற்கொண்டிருக்கிறோம். இப்போது 1981 ஆம் ஆண்டு நடந்து கொண்டு இருக்கிறது. இன்னும் 7, 8 மாதங்களிலேதான் முழு விவரம் கிடைக்கும். அதற்குப் பிறகு அந்த விவரத்தின் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஏ. சி. சண்முகம்: ஆண்டுகள் செல்லச் செல்ல மதிப்பீட்டுத் தொகையும் இரட்டிப்பாகிறது. 1977 ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டுகள் தள்ளிவைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்போது மூன்று ஆண்டுகள் முடிந்திருக்கிறது. அதனுடைய அறிக்கையை வரவழைத்து இந்த ஆண்டு பட்ஜெட்டிலே அது சேர்க்கப்படுமா?

1981 ஜனவரி 30]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: 3 ஆண்டுகளுக்கு தள்ளிவைக்கிற உத்தரவு 5-12-1978 ஆம் ஆண்டிலே இடப் பட்டிருக்கிறது. எனவே 1981 ஆம் ஆண்டு டிசம்பர் வரை 3 ஆண்டுக்கால அளவு இருக்கிறது. அதற்குப் பிறகு நீரின் அளவு எவ்வளவு கிடைக்கும் என்று தெரியும். அப்படித் தெரிந்ததற்குப் பிறகு நீரியல் அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

* வினா எண் 116— திரு. இல. பலராமன்: மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடி தாலுக் காவில் பாலாற்றின் குறுக்கே புல்லூர் அணை கட்டும் திட்டம் பரிசிலிக்கப்பட்டதா?

(ஆ) அத்திட்டம் தற்போது என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) பாலாற்றின் உபரிநீர் குறைந்து இருப்பதாலும், ஆந்திர மாநிலத்திலுள்ள நிலங்கள் நீர்ப்பிடிப்பில் மூழ்க வாய்ப்பி ருப்பதால் அம்மாநிலம் ஆட்சேபணை தெரிவித்ததின்பேரிலும் இத்திட்டம் கைவிடப்பட்டது.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, பாலாறு தமிழ் நாட்டிலே ஒரு முக்கியமான ஆறு என்பதை நாம் அறிவோம். என்றைக்குமே வறட்சியாக இருப்பதைப் போக்குவதற்காக கர்நாடக மாநிலத்திலுள்ள கேத்தமங்கலம் ஏரியிலிருந்து நீர் திறந்து விடுவதற்கு பேச்சுவார்த்தைகள் நடக்கக்கூடிய சூழ்நிலை அரசுக்கு இருக்கிறதா அல்லது திட்டம் இருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மூலக்கேள்வி 'வட ஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி தாலுக்காவில் பாலாற்றின் குறுக்கே புல்லூர் அணைகட்டும் திட்டம்' என்பதுபற்றி. அதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் இப்போது கேட்ட கேள்வியை தனியாகப் போடும்படிக் கேட்டுக் கொள்கிறேன்

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, இந்த புல்லூருக்கு கீழேயும் வாணியம்பாடிக்கு அருகிலும் ஆந்திர மாநிலத்திலே நீர்த்தேக்கம் பிடிக்காமல் இருப்பதால் அணைகட்டுவதற்கு சாத்தியக்கூறு இருப்பதாக பரவலாகப் பேசப்படுகிறது. அதைப் பற்றி பரிசிலிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: நாம் அறிவித்திருக்கிற புல்லூர் அணைக்கட்டு திட்டத்தின்படி ஆந்திர மாநிலத்தில் சித்தூர் தாலுகாவில் பெடவங்கா கிராமத்தில் சுமார் 200 ஏக்கர் இன்னும் அதற்குக் கூடுதலாகவே நீரில் மூழ்கியிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.